Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். பிலவ தை 28 ஆம் நாள ரம்ழான் 4 (10-2-62) சனிக்கிழமை இதழ் 312




# யாழ். புதிய மேயர் யார்?

## திரு. துரைராஜா பதவியில் இருந்து விலக முடிவு

யாழ்ப்பாணம், சனி

**யாழ்ப்பாண நகரமேயர் திரு. டி. எஸ். துரைராசா தமது பதவியை ராஜிநாமாச்செய்யப்போவதாக நேற்று நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் அறிவித்துவிட்டார்**

"இதுவே நான் தலைமைவகித்து நடத்தும் கடைசிக் கூட்டம். எனது பதவியை ராஜினாமாச் செய்ய இருப்பதே இதற்குக் காரணம். எனது பதவிக் காலத்தில் என்னுடன் ஒத்துழைத்த கமிஷனருக்கும், அங்கத்தவர்களுக்கும், ஊழியர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்." என்று மேயர் துரைராஜா நேற்றைய கூட்ட முடிவில் கூறினர்.

புதிய மேயர் யார்? என்ற கேள்வி மாநகரசபை வட்டாரங்களில் நேற்று மாலையே தோன்றிவிட்டது. உதவி மேயர் தேர்தலில் சிதைந்துபோனதாகக் கருதப்பட்ட சென்ற வருட ஒப்பந்தப்படி டாக்டர் எஸ. ஏ. தர்மலிங்கம் புதிய மேயராகத் தெரிவுசெய்யப்படக் கூடுமென்றும் கருதப்படுகிறது.

கடந்த சமார் ஒரு வருட காலத்தில என்றுமில்லாதபடி அமைதியானசூழ்நிலையில் நடைபெற்ற யாழ்ப்பாண மாநகர சபைக் கூட்டம் அடுத்த மேயர் யார் என்ற கேள்விக்குறியுடன் எதிர்பாராத முறையில் முடிவுற்றுள்ளது. கடந்த காலங்களில் நடைபெற்ற கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் பெரும்பான்மைச் சிறுபான்மைக் கோஷ்டிகள் என்ற அடிப்படையில் அங்கத்தவர்களுக்கிடையே கூட்டத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்படுவது சர்வசாதாரணமாகியிருந்தது. ஆனல் நேற்றைய கூட்டம் முற்றும் புதிய சூழ்நிலையில் ஆரம்பமானதை. அங்கத்தவர்கள் பரஸ்பரம் விவாதித்து, விட்டுக்கொடுத்து தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

### மேயரின் கடைசிக் கூட்டம்

கூட்டமுடிவில் தற்போதைய மேயர் திரு. டி. எஸ். துரைராசா, 'நான் தலைமை தாங்கும் கடைசிக் கூட்டம் இதுதான். யான் மேயர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளப் போகிறேன். இந்நேரத்தில் எனக்கு ஒத்துழைப்பு அளித்த அங்கத்தவர்களுக்கும், ஊழியர்களுக்கும் எனதுநன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என்று கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

கடந்த வருட ஆரம்பத்தில் பெரும்பான்மைக் குழுவினல் செய்யப்பட்ட ஒப்பந்தப்படி இவ்வாண்டின் புதிய மேயராக டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனல் ஒப்பந்தத்திற்கு மாருக நடைபெற்று முடிந்து உதவி மேயர் தேர்தலைத் தொடர்ந்து ஒப்பந்தம் சிதைக்கப்பட்டதாகக் கருதப்பட்டது.

தற்போதைய மேயர் திரு. துரைராசா தமது பதவியை மிக விரைவில் இராஜிநாமாச் செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் புதிய மேயர் தெரிவில், பழைய ஒப்பந்தப்படி டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் மேயராகத் தெரிவுசெய்யப் படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறப் படுகிறது.

## சதித்திட்டக்காரர்கள் கைது

### மாமூல் நடவடிக்கை

### அரசாங்க அதிகாரி விளக்கம்

கொழும்பு, வெள்ளி

சதித் திட்டம் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள 29 பேர்களையும் காவலில் வைத்திருப்பதற்கானஉத்தரவு நேற்றிரவுவெளியான விசேஷ 'கஸட்' அறிக்கை மூலம் புதுப்பித்துப் பிரகடனப் படுத்தப்பட்டது.

சட்ட ரீதியான ஒரு மாமூல் நடவடிக்கைதான் இந்தப் புதிய பிரகடனம் என ஒரு அதிகாரி விளக்கம் தெரிவித்தார்.

சதித் திட்டம் சம்பந்தமாக காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களைச் சந்திப்பதற்கும் கடிதம் எழுதுவதற்கும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி தனது உசிதம்போல் அனுமதி அளிக்க முடியுமென்று சென்ற செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட உத்தரவு இன்னும் அமுலில் இருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

1961-ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் ஒரு மாத காலத்துக்குத்தான் அமுலில் இருக்க முடியுமென்றும் ஒவ்வொரு மாதமும் அது புதிதாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டுமென்றும் அந்த அதிகாரி விளக்கம் தெரிவித்தார். இந்த வழக்கத்தையொட்டியே காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் காவல் நீடிக்கப்பட்டுள்ளதாக புதிய பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளதென்று அவர் கூறினர்.

அவசரகால நிலைமையை மேலும் நீடிக்கும் கவர்னர் ஜெனரலின் பிரகடனமும் விசேஷ 'கஸட்' மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

## புதிய வீட்டுவரி மதிப்பை குறைக்க வேண்டும்

### மாநகரசபை தீர்மானம்

### புதிய சந்தைக்கு முறையான ஒப்பந்தம் செய்ய முடிவு

யாழ்ப்பாணம், சனி

"வீட்டு வரி மதிப்புக்காக இப்போது செய்யப்பட்டுள்ள புது மதிப்பு சில வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட மதிப்பை விட மிக மிக அதிகமாக ஏற்பட்டிருப்பதால், இப் புது மதிப்பு மக்களுக்குத் தாங்க முடியாத பெருங் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே எந்தக் கட்டடத்தின் புது மதிப்பீடும் சென்ற மதிப்பிலிருந்து முப்பத்தி மூன்றே

(8-ம்பக்கம் பார்க்க)

## பஸ்விபத்தில் 45 பேருக்கு காயம்

கொழும்பு—வெள்ளி

பத்தார முல்லையிலிருந்து கொழும்பு சென்று கொண்டிருந்த 'எக்ஸ்பிரஸ்" பஸ் வண்டியொன்று பாதையை விட்டு விலகிச் சென்றதால் ஏற்பட்ட விபத்தில் சுமார் 45 பிரயாணிகள் படு காயமுற்றனர். பாதைமீறிச் சென்ற பஸ் வீதிக்கு அருகாமையிலுள்ள வயல் நிலத்தில் புக்கவட்டமாகச் சரிந்தது. காயமுற்றவர்களில் 12 பேர் கொழும்பு அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஏனைய 33 பேர்களும் வெளி நோயாளிகள் சிகிச்சைப் பகுதியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

விளையாட்டு வீரப் பெண்மணி ஒருவரான மாறீ குலத்துங்காவும் காயமடைந்தவர்களில் ஒருவராவர். சுமார் 76 பிரயாணிகளை பஸ் ஏற்றிச் சென்று கொண்டிருக்கையில் விபத்து சம்பவித்ததாம். ஏனைய பிரயாணிகள் காயமின்றித் தப்பினர்.

## ரூ. 1 கோடி 40 லட்சம் மேலதிக செலவு

### சகல பாடசாலைகளையும் 'எடுத்தால் ஏற்படும்!

கொழும்பு, வெள்ளி

சகல தனிப்பட்ட பாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தேசிய கல்விக் கமிஷன் உப குழு செய்த சிபார்சை அமுல் நடத்துவதாகவிருந்தால் அரசாங்கத்துக்கு மேலும் ஒரு கோடி 40 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும் என்று கல்வி இலாகா தயாரித்த புள்ளி விபர மதிப்பீட்டிலிருந்து தெரியவருகிறது.

ஆசிரியர்களின் சம்பளம், பாடசாலை கனிஷ்ட ஊழியர்களின் சம்பளம், பாடசாலைக் கட்டிடங்களின் பராமரிப்பு, பாடசாலைத் தளபாடங்களின் பராமரிப்பு ஆகியவைகளின் செலவுக்கு ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் மேலதிகமாகத் தேவைப்படும்.

## வெளிநாட்டு வர்த்தகத்தில் வீழ்ச்சி

கொழும்பு, வெள்ளி

காமன்வெல்த் நாடுகள் தவிர்ந்த இதர நாடுகளுக்கு இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் சென்ற வருடம் நவம்பர். மாதத்துடன் முடிவடைந்த பதினெரு மாதங்களில் எட்டுக் கோடி 20 லட்சம் ரூபாய் வீழ்ச்சியடைந்தது.

இலங்கையின் பிரதம ஏற்றுமதிப் பொருள்களான ரப்பர், தேயிலை, தெங்குப் பொருள்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டதே இதற்கு முக்கிய காரணம்.

## தலைவர் தேர்தல்களுக்கு மறுதேதி குறிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 9 ம் 10ம் திகதிகளில்நடைபெறவிருந்த புலோலி சுழிபுரம், முகமாலை ஆகிய கிராம சபைகளின் தலைவர் தெரிவு மறுதேதி குறிக்கப்படாது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஈழநாடு

11 – 2 – 62 வாரப் பதிப்பில்

★ பேராசிரியர் சுந்தரலிங்கம் கடிதங்கள்

★ வாழ்த்தில் அமைந்த வனப்பு:
இலக்கியக் க்ட்டுரை
வித்துவான் பொன். முத்துக்குமாரன்

★ கடைசி ஆசை:
சிறுகதை 'பரம்'

★ கலைதரு வாழ்வு

★ விண்வெளிச் சாதனைகள்

★ உலகமேடை
★ சிறுவர் பூங்கா ★ கலை அரங்கம்
★ கவிதை

இஸ்ரேல் அனுபந்தமும் இணைக்கப்பட்டுள்ளது

வேறும் பல சுவையான அம்சங்கள்

பக்கங்கள் 16 தனிப்பிரதி சதம் 15

# திருச்சி மாவட்டத்தில் தேர்தல் கண்ணோட்டம்

திருச்சி மாவட்டத்திலுள்ள 19 சட்டசபை ஸ்தானங்களுக்கு 68 அபேட்சகர்கள் போட்டி போடுகிறார்கள். இம் மாவட்டத்தில் 20 சட்டசபைத் தொகுதிகள் உண்டு. காங்கிரஸ் சார்பில் அபேட்சை மனு தாக்கல் செய்திருந்த திரு. அண்ணாமலை முத்துராசா காலமானதால் அந்தநல்லூர் சட்டசபைத் தொகுதிக்கான தேர்தல் மார்ச் மாதம் 9ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இதனால் இப்பொழுது 19 தொகுதிகளில்தான் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இம்மாவட்டத்திலுள்ள 4 பாராளுமன்றத் தொகுதிகளுக்கு 12 அபேட்சகர்கள் நிற்கிறார்கள்.

## தேர்தல் பிரசாரத்தில் புதிய முறை

இம் மாவட்டத்தில் தேர்தல் பிரசார இயக்கம் மும்முரம் அடைந்துள்ளது. இங்குள்ள காங்கிரஸ் தேர்தல் கந்தோரின் மேல் 'காங்கிரஸ் நீடூழி வாழ்க' என்று பொறிக்கப்பட்ட 'பலூன்' பறக்கவிடப்பட்டுள்ளது. எதிர்க் கட்சிகளில் விசேஷமாக திராவிட முன்னேற்றக் கழகமும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஊர்வலங்கள் நடத்துதல், நூற்றுக் கணக்கான சைக்கிள்களில் கட்சி சுலோகங்களை சொல்லிக்கொண்டு செல்லுதல், மூலைமுடுக்குகளிலும் சுவரொட்டிகளை ஒட்டுதல் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. இப்பொழுதுத் தேர்தலில் புதிய பிரசார முறையொன்று புகுத்தப்பட்டுள்ளது. தலைவர்கள் படங்களை பிரதான வீதிகள் சந்திகளில் ஒட்டுவதோடு அவர்கள் சம்பந்தமான கூடாரத்த் சித்திரங்களையும் வரைந்து பல கட்சிகளும் வெளியிட்டிருக்கின்றன.

காங்கிரஸ் கட்சிக்கு இங்கு பலத்த எதிர்ப்பு எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. தி. மு. க. தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. குளித்தலைத் தாலுகாவுக்கு அண்மையில் முதலமைச்சர் காமராஜர் தேர்தல் பிரசாரத்திற்கு வந்தபோது இங்கு அவரை வரவேற்றது தி. மு. க. கொடிகள் என்பது தெரிந்ததே. ஈ வெ. ரா, பெரியார் தி. மு க., கம்யூனிஸ்ட், சுதந்திரா ஆகியவற்றுக்கு எதிராக பச்சைத் தமிழர் காமராஜர் கட்சியை ஆதரிக்குமாறு தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

## நான்கு தொகுதிகளில் நேரடிப் போட்டி

பத்தொன்பது சட்டசபைத் தொகுதிகளில் இரண்டு தொகுதிகள் ரிசர்வ் தொகுதிகளாக இருக்கின்றன காங்கிரஸ் 19 பேரையும், தி மு. க. 16 பேரையும், சுதந்திரா 8 பேரையும், கம்யூனிஸ்ட் 3 பேரையும், தமிழ்த் தேசியக் கட்சி, சோஷலிஸ்ட், பிரஜா சோஷலிஸ்ட்

## தமிழகமும் பொதுத்தேர்தலும்

முஸ்லிம் லீக், ஆகியன தலா ஒரு அபேட்சகரையும் தேர்தலில் நிறுத்தியிருக்கின்றன. சுயேச்சையாக 18 பேரும் போட்டி போடுகிறார்கள். இந்த 68 அபேட்சகர்களில் 12 பேர் (காங்கிரஸ் 11, கம்யூனிஸ்ட் 1) தற்போதைய சட்டசபை உறுப்பினர்களாகும். நான்கு தொகுதிகளில் நேரடிப் போட்டியிருக்கின்றன. திருச்சி - 2ல் கம்யூனிஸ்டுக்கும் காங்கிரசுக்கும், குளித்தலை, புதுக்கோட்டை, பெரம்பலூர் ஆகிய தொகுதிகளில் தி.மு.க.வுக்கும் காங்கிரசுக்கும் பலத்த நேரடிப் போட்டிகள் உள்ளன. மணப்பாறை, ஜெயங்கொண்டான் ஆகிய தொகுகளில் ஆறு பேர் போட்டி போடுகிறார்கள். இரண்டு பெண் அபேட்சகர்கள் மாத்திரம் இங்கு போட்டியிடுகிறார்கள். ஜெயங்கொண்டானில் தி. மு. க. அபேட்சகராக திருமதி ஜெகதாம்பாள் வேலாயுதமும், முசிறி ரிசர்வ் தொகுதியில சோஷலிஸ்ட் அபேட்சகராக திருமதி எம். நாகம்மாளும் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

## பார்லிமெண்ட் தொகுதிகளில் மும்முனைப் போட்டி

இம்மாவட்டத்திலுள்ள 4 பார்லிமெண்ட் தொகுதிகளிலும் 12 அபேட்சகர்கள் (காங்கிரஸ் 4, கம்யூனிஸ்ட் 3, சுதந்திரா 2, தி. மு. க. 1, சுயேச்சை 2) போட்டிக்கு நிற்கிறார்கள். இதில் மூவர் தற்போதைய அங்கத்தவர்கள். இதில் மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது. கரூர், திருச்சிராப்பள்ளி தொகுதிகளில் காங்கிரசுக்கு பலத்த ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது.

## கட்சிகளுக்கிடையே பலத்த போட்டி

சட்டசபைத் தொகுதிகளைப் பொறுத்தவரை திருச்சி-1 திருச்சி-2, குளித்தலை ஆகிய இடங்களில் ஆளுங்கட்சிக்கு அதிக செல்வாக்கிருப்பதாகத் தெரிகிறது. சென்ற தேர்தலில் குளித்தலையிலிருந்து தி. மு. க. திரு. கருணாநிதி தெரிவு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே! இத்தேர்தலில் தஞ்சாவூர் தொகுதியில் நிற்கிறார். கடந்த தேர்தலில் சுயேச்சையாகத் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் இ. பி. முத்துமணி எம், எல். ஏ. இத்தேர்தலில் காங்கிரஸ அபேட்சகராகப் போட்டியில் நிற்கிறார். இவரை எதிர்த்து தி. மு. க அபேட்சகர் திரு. எம். எஸ. மணியும், சுயேச்சையாக ஒருவரும் போட்டி போடுகிறார்கள். கம்யூனிஸ்டின் கோட்டையெனக் கருதப்படும் திருச்சி-2 தொகுதியில் கம்யூனிஸ்ட் அபேட்சகர் திரு. எம். கல்யாணசுந்தரத்தை எதிர்த்து தேர்தலுக்கு புதியவரான காங்கிரஸ் அபேட்சகர் திரு. டி. என். இராஜேந்திரம் போட்டி போடுகிறார் லால்குடி, டி. புதூர் தொகுதிகளில் தி. மு. க.வுக்கும், வெங்கலம் ரிசர்வ் தொகுதியில் சுதந்திராவுக்கும், பலத்த ஆதரவு இருக்கிறது. சுதந்திரக் கட்சியில் போட்டியிடுபவர் அனுபவம் வாய்ந்த முன்னாள் காங்கிரஸ்காரராகும், இவரை தி.மு.க. அபேட்சகர் எதிர்த்துப் போட்டிபோடுகிறார்.

1959 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் நான்கு பார்லிமெண்ட் ஸ்தானங்களையும் 20 சட்டசபைத் தொகுதிகளில் 17 சட்டசபைத் தொகுதிகளையும் காங்கிரஸ் கைப்பற்றியது தெரிந்ததே! ஆனால் இத்தேர்தலில் தி மு. க., சுதந்திரா, கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் பலத்த போட்டியில் இறங்கியுள்ளன. இந்த எதிர்க் கட்சிகள் குறைந்தது இரண்டு பார்லிமெண்ட் ஸ்தானங்களையும், ஆறு சட்டசபை ஸ்தானங்களையும் கைப்பற்றுமென நம்பிக்கை கொண்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 18.24 லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். 2,112 வாக்குச் சாவடிகள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## திருச்சி மாவட்டத்தில் தமிழரசு ஆதரவு?

திருச்சி மாவட்ட தமிழரசுக் கழகக் கூட்டம் தமிழ்நாடு தமிழரசுக் கழக காரியதரிசி திரு. கோ. கலிவரதன் தலைமையில் நடந்தது. திருச்சி மாவட்டத்தில் காங்கிரஸ் அபேட்சகராக பொதுத் தேர்தலில் போட்டியிடும், 24 பேர்களில் 19 பேர்களை ஆதரிப்பது என்று திருச்சி கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் தொகுதிகளில் மக்கள் சபைக்கான காங்கிரஸ அபேட்சகர்களையும் ராஜ்ய சபைக்கான காங்கிரஸ அபேட்சகர்களையும் திருவாளர் என். சுப்மணிய செட்டியார் (ஸ்ரீரங்கம்), டாக்டர் ஈ. பி. மதுரம் (திருச்சி), மந்திரி திரு. வி. ராமையா (திருமயம்), டி. நல்லசாமி (கரூர்), ராமநாதன் (குளித்தலை), சதாசிவம் (அரவக்குறிச்சி), கே. கே. முத்தையா (பஞ்சப்பட்டி), மங்கப்பன் (ஆலங்குடி), அருணாசலத் தேவர் (புதுக்கோட்டை), என். ராமலிங்கம் (முசிறி), வி. ஏ. முத்தையா (ஒப்பிலாபுரம்). ஆர். ராமசெட்டியார் (பெரம்பலூர்), எம். அய்யாக்கண்ணு (வெங்கலம்), அந்தோணிசாமி உடையார் (வால்குடி), சாமிகண்ணு படையாச்சி (ஜெயங்கொண்டம்) டி. கே. சுப்பையா (திபாலூர்), ஆகியவர்களையும் தமிழரசுக் கழகம் ஆதரிக்கும் எனத் தெரிகின்றது.

## திரைப்படமூலம் தேர்தல் பிரசாரம்

தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரத்தையொட்டி திரைப் படங்களையும் சிலைடுகளையும் காட்டுவதற்கு சில நிபந்தனைகளின் பேரில் 1955 ஆம் ஆண்டு சென்னை திரைபபட (விதிகள்) சட்டத்திலிருந்து விலக்கு அளிப்பதென்று தமிழ் நாடு அரசு முடிவுசெய்துள்ளது. இதுபற்றிய அரசு அறிக்கை வருமாறு:- இத்தகையத் திரைப்படங்களை திறந்த வெளிகளில் காட்டவேண்டும். நிரந்தரமான அல்லது தற்காலிகமான அரங்குகளில் இவற்றை திரையிடக்கூடாது. திரைப்படக் காட்சிகளைக் காண்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கக் கூடாது. தடை செய்யப்பட்ட திரைப்படங்களையோ அல்லது மத்திய திரைப்படத் தணிக்கைக் குழுவால் அனுமதிக்கப்படாத திரைப்படங்களையோ காட்டக்கூடாது. படங்களைத் திரையிடுவதற்கான கருவிகளுக்கு மின்சாரத் தொடர்புபற்றித் தகுந்த முன் பாதுகாப்பு எடுக்கவேண்டும். அந்தப் பகுதியில் தேர்தல் நடப்பதற்கு முன்தினம் வரை இத்தகைய விதிவிலக்கு செல்லும்.

## மட்டக்களப்பு நகரசபையின் கமிட்டிகள் தெரிவு

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு நகரசபையின் மாதாந்த கூட்டம் அதன் தலைவர் திரு ஜே. எல் திஸவீரசிங்கம் தலைமையில் கூடியபோது புதிய வருடத்திற்குப்பின்வரும் கமிட்டிகள் தெரிவு செய்யப்பட்டன.

### நிதிக் கமிட்டி

திரு. ஏ. எஸ். டி. கனகசபை. திரு. என். அருளாநந்தம், திரு. எஸ். கணேசமூர்த்தி திரு. ஜே. என். ஹென்றி திரு. ரா. செல்வநாயகம் திரு. ஆர். கதிரவேலு, திரு எஸ். குழந்தைவேலு.

### சுகாதாரக் கமிட்டி

திரு. எஸ். ஜேம்ஸ், திரு. பி. எஸ். கனகசபை, திரு. ஆர். கதிரவேலு, திரு. பி. ஆர். செல்வநாயகம், திரு. என். அருளாநந்தம், திரு. ஜே. என். ஹென்றி.

### விளையாட்டுக் கமிட்டி

திரு. கணேசமூர்த்தி, திரு ஆர். கதிரவேலு, திரு. செல்வநாயகம். வண. பிதா. வெபர் வண.பிதா.கிறௌதர், திரு.வி. ஞானசூரியம், செல்வி. ஆர். ரி.எஸ்.கனகரத்தின. திரு. பி சீவரத்தினம்,திருமதி.டி.சிவநாதன், திரு. எஸ் குழந்தைவேல் திரு. வி. வாமதேவன்.

### வாசிகசாலைக்கமிட்டி

திரு. பி. செல்வநாயகம், திரு குழந்தைவேல், திரு. எஸ். ஜேம்ஸ், திரு.ஆர். கதிரவேலு, திருமதி. க. திருநாவுக்கரசு, திரு. கே. கணபதிப் பிள்ளை, வண. பிதா. வம்பேக், வண. பிதா. இராமநாதன், திரு.வி. ஞானசூரியம், திரு. எஸ். பத்மாநந்தவேல், செல்வி. ஆர் கந்தையா

## உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு தை மாதம் 28ந் திகதி (10-2-62) சனிக்கிழமை மாலை 5-29 வரை ஷஷ்டி. அதன் பின் ஸப்தமி. முன்னிரவு 11-07 வரை அச்சுவினி. அதன் பின் பரணி. பின்னிரவு 41-23 வரை சித்த யோகம். ஷஷ்டிவிரதம்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இத்தினத்தில் பிறந்தவர்களுக்கு வருடத்தின் முற்பகுதியில் மத்திமமான பலன்களும் பின்னர் நற்பலன்களும் அதிகமாக இருக்கும். விவாகப்பேறுகளும், குடும்பங்களில் சுபகருமங்கள் நடத்தலுக்கும் இடமுண்டு. பணமுடக்கம் செய்து புதிய தொழில்களாரம்பித்தற்கு ஏற்றகாலம் ஆண்டின் நடுப்பகுதியாகும். உத்தியோகத் துறையினர் முற்பகுதியில் நிதானமாகவும் பொறுமையாகவும் தம் கடமைகளைச் செய்துவரின் பின்னர் அதற்குரிய பலனைப் பெற்று இன்பமடைவர் பெண்களுக்கும் விசேட பலன்கள் பிற்பகுதியில் இருக்கின்றன.

அச்சுவினி: குடும்பத்தொல்லை, உணவுத்தடை. பரணி: குடும்ப நலம், பணவரவு. கார்த்திகை: தொழில்விருத்தி, ஊழியரின் உதவி. ரோகிணி: செலவதிகம், கடன் தொல்லை. மிருகசீரிடம்: வித்தை விருத்தி, வாக்கு வன்மை. திருவாதிரை தாயாதிகளால் கஷ்டம், காரியத் தடை. புனர்பூசம்: செய்காரிய பலிதம், சுகம். பூசம்: ஊழியர் கஷ்டம், கடன்படல். ஆயிலியம்: பெரியோர்உதவி, மதிப்பு. மகம்: நலக்குறைவு, பணக்கஷ்டம். பூரம்: பிரயாண நலம், சுகம். உத்திரம்: பிரயாண நலம், பெரியோர் சேர்க்கை. அத்தம்: பிரயாணத்தடை, ஊக்கமழிதல். சித்திரை: பணவசதி, வர்த்தக நலம். சுவாதி: துணிவினால் கேடு, புதியன தடைப்படல். விசாகம்: சுகம், பணமுடை நீங்கல் அனுஷம்: தொழில் தாமதம், இனத்தோரால் கஷ்டம். கேட்டை: அலைச்சல், பணக்கஷ்டம். மூலம்: ஏமாற்றப்படுதல், தொழிற்கஷ்டம். பூராடம்: விவாகபேச்சு. தொழில் நலம். உத்தராடம்: இலாப வரவு, தொழிலூக்கம். திருவோணம்: ஊழியர் கஷ்டம், பணவரவு தாமதம். அவிட்டம்: பிரயாணம், செய்தொழில் நலம். சதயம்: இழிந்தோர் சேர்க்கை, மதிப்பிழத்தல். பூரட்டாதி: ஊழியர் உதவி, தொழில் நலம். உத்தரட்டாதி: தேகநலம் குறைதல், கஷ்டம். ரேவதி: சிந்தை தெளிவு, தொழில் ஊக்கம்.

## வெட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார்

அநுராதபுரம், வெள்ளி

ரத்மலியைச் சேர்ந்த ஜீ. டபிள்யு. உக்குவா என்பவரின் உடல், ஏராளமான வெட்டுக்காயங்களுடன் நெலிபெவ என்ற இடத்திலுள்ள சூதாடும் குடிசையொன்றுக்குள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

அனுராதபுரம் மாஜிஸ்டிரேட் திரு. சி.வி. உடலகம விசாரணை நடத்தினர். விசாரணையின் போது, சந்தேகிக்கப்பட்ட ஜே. நிமால் எனபவரும், பலரும் சீட்டுக்கள் (காட்ஸ்) விளையாடினர்கள் என்பது தெரியவந்தது. ஹிடோகம என்ற இடத்தைச் சேர்ந்த பி. எம். டிக்கிரி பண்டா என்பவர் இறந்தவரை அடையாளம் கண்டுபிடித்தார்.

சீட்டு விளையாடிக்கொண்டிருந்தசமயம், நிமாலுக்கும் டிக்கிரிபண்டாவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அதைத் தடுக்க ஜயசேகரா என்பவர் முனைந்தபொழுது; நிமால், ஜயசேகராவை சீட்டு விளையாடிக் கொண்டிருந்த இடத்துக்கு வெளியில்வைத்து கிறிஸ்கத்தியினால் குத்தியதாகவும் அதைக் கண்டு டிக்கிரிபண்டாவும், நிமாலும் வெவ்வேறு திசைகளில் ஓடிவிட்டனரென்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

ஜயசேகரா அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

உக்குவாவின் உடலைப் பிரேதபரிசோதனைக்கு அனுப்பும்படியும், நிமாலை பெப்ரவரி மாதம் 12ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படியும் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

## கைப்பந்தாட்டம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை ஸ்புட்னிக் விளையாட்டுக்கழக 'பி' பிரிவு கோஷ்டிக்கும் தையிட்டி 'ஸரார்ஸ விளையாட்டுக்கழக 'பி' பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கைப் பந்தாட்டப் போட்டியில் ஸ்புட்னிக் கோஷ்டி 2—1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

### தேவை

மாட்டுப்பட்டி வேலையில் நல்ல அனுபவமுள்ள ஆள் தேவை. சம்பளம் மாதம் ரு. 150-அல்லதுஉணவுடன் ரூபாய் 100 மாத்திரம் நேரிலோ கடிதமூலமோ விண்ணப்பிக்கவும். சரஸவதி மில்ஸ், 150 கஸதூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் ...ரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரு. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்

# வெளி மந்திரிகள் மகாநாட்டை கூட்ட மேற்கு வல்லரசுகள் யோசனை

## அமெரிக்கா நேற்று அணு சோதனை நடத்தியது

வாஷிங்டன், பெப். 9

**அணு ஆயுதத் தடைபற்றி மார்ச் 14ம் தேதி பிரிட்டிஷ், அமெரிக்க, ரஷ்ய வெளிநாட்டு மந்திரிகள் கூடிப்பேச வேண்டுமென அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாக ரஷ்யாவுக்கு யோசனை கூறியுள்ளன.**

இதே திகதியில்தான் ஜெனீவாவில் 18 நாடுகளின் ஆயுதப் பரிகரண மகாநாடு நடைபெறவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுசம்பந்தமான கூட்டறிக்கை லண்டனிலும் வாஷிங்டனிலும் ஏககாலத்தில் வெளியிடப்பட்டன.

அமெரிக்கா அணுசோதனை நடத்துவதற்காக, பிரிட்டன் தன்வசமுள்ள கிறிஸ்மஸ் தீவை அனுமதித்துள்ளது. அத்துடன், பிரிட்டனின் முதலாவது அணுசோதனை நடைபெறவிருப்பதாயும், இதற்கு நெவாடாவை அளிக்க அமெரிக்கா முன்வந்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவின் மாபெரும் அணுசோதனை ஒரு காரணத்தைக் குறிப்பதாய் இருப்பதால், தாங்களும் அணுசோதனை நடத்துவது அவசியம் என அமெரிக்கா கருதுகிறதாம். இதே சமயம் அணு ஆயுதப் போட்டி நிற்காமல் தொடர்ந்து நீடிக்குமானால் அது மனுக்குலத்துக்கே பேராபத்தானதாகுமென்றும், எல்லா நாடுகளும் இதைத் தவிர்க்கப் பாடுபடவேண்டுமென்றும் கூறப்பட்டது.

வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு நடைபெறவேண்டுமென்ற தங்கள் யோசனைபற்றி அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும், பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மிலனும் திரு. குருஷ்சேவுக்கு எழுதியுள்ளனர்.

இதே சமயம் குறைந்த சக்தியுள்ள ஒரு அணுசோதனையை அமெரிக்கா நேற்று நெவாடாவில் பூமிக்கடியில் நடத்தியதாய் அறிவிக்கப்பட்டது.

---

## டாக்கா கிளர்ச்சி மேலும் பரவுகிறது

### இதுவரை இருநூறு பேர் கைதாயினர்

டாக்கா, பெப். 9

**டாக்காவில் ஆரம்பமான மாணவர்கள் கிளர்ச்சி, கிழக்கு வங்காளத்தில் மேலும் பல இடங்களுக்குப் பரவியிருக்கிறது.**

பாரிசால், குஷ்டியா ஆகிய ஜில்லாக்களில் மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். பாரிசாலில் மாணவர்கள் ஊர்வலமாகச் கிளம்பி நகர மண்டபத்துக்குச் சேதம் விளைவித்ததாயும் இது சம்பந்தமாக 25 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

குஷ்டியாவில் சட்ட விரோத நடவடிக்கைக்குத் தூண்டியதாக 7 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

டாக்காவில் இதுவரை 200 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 3 மந்திரிகளும், ஒரு பத்திரிகை ஆசிரியரும் அடங்குவர்.

---

சுரங்க விபத்து

## 284 பேர் மாண்டனர்

பொன், பெப். 9

மேற்கு ஜெர்மன் சுரங்கமொன்றில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக இதுவரை மாண்டவர்கள் தொகை 284 என அறிவிக்கப்படுகிறது.

---

## துப்பாக்கி குண்டுகளை காணவில்லை

### ஒருவர் கைதாகி ஜாமீனில் விடுதலை

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலைக் கச்சேரியில் துப்பாக்கிக் குண்டுகள் காணுமற்போனது சம்பந்தமாக திருக்கோணமலைப் பொலிசைச் சேர்ந்த ஒருவர் மாஜிஸ்டிரேட் திரு. எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். அவரை 500 ரூபாய் பிணையில் செல்ல மாஜிஸ்ரேட் அனுமதி வழங்கினர்.

உதவி இன்ஸ்பெக்டர் கருணாரத்னவும், சார்ஜண்ட் சிவராஜாவும் விசாரணை நடத்தியதன் பேரில் கண்டியிலுள்ள வியாபாரிகள் சிலரிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் 775 துப்பாக்கிக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

---

## 'மேற்கு இரியனைவிட்டு டச்சு வெளியேறவேண்டும்'

### ரஷ்யா அறிவிப்பு

மாஸ்கோ, பெப். 9

**மேற்கு இரியனைவிட்டு டச்சுக்காரர்கள் வெளியேற வேண்டுமென்றும், தொடர்ந்து அங்கு அவர்கள் ஆதிக்கம் செலுத்துவது ஐ. நா. சாஸனத்தின் காலனிக் கொள்கைக்கு மாறானதென்றும் ரஷ்யா கூறியுள்ளது.**

ரஷ்யாவின் இந்த அறிக்கை மாஸ்கோ வானொலிமூலம் ஒலிபரப்பப்பட்டது.

ஹாலந்து மேலும் மேலும் துருப்புக்களை அனுப்பி மேற்கு நியூகினியில் தன் ஆதிக்கத்தைப் பலப்படுத்திவருவதாயும் ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

இதே சமயம், டச்சுத் துருப்புக்கள் தங்கள் நாட்டு வழியாகச் செல்வது தொடர்ந்து மறுக்கப்படும் என ஜப்பான் அறிவித்திருக்கிறது. துருப்புக்களுடன் கூடிய டச்சு ஜெட் விமானத்துக்கு ஜப்பான் அனுமதி மறுத்த செயல், இருநாடுகளின் விமான ஒப்பந்தத்துக்கு மாறானது என டச்சு அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

---

## அமெரிக்க கிரகம்

கேப்கனவரேல், பெப். 9

அமெரிக்கா அனுப்பியுள்ள செயற்கைக் கிரகம் ஒன்று பூமியைச்சுற்றி வந்துகொண்டிருக்கிறது. போட்டோக்களையும், இதர தகவல்களையும் அது அனுப்பிக்கொண்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

---

புதுடில்லி, பெப். 9

மணிப்பூரில் 2 மாதகாலத்திற்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பகைநாகர்களின் நடவடிக்கையே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டது.

---

## இலங்கையிலிருந்து திரும்பும் இந்தியர்

### தென்னை சாகுபடியில் அமர்த்த திட்டம்

புதுடில்லி, பெப். 9

இராமனதபுரம் கடலோரத்தில் தென்னை மரம் நடும் திட்டத்தில் இலங்கையிலிருந்து திரும்பும் இந்தியர்களை அமர்த்த இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இத்திட்டத்தின்படி ஒருவருக்கு ரூ. 2850 கடன் வழங்கப்படும். பதினொரு வருடங்களுக்குப் பின் 20 ஆண்டுகளில் இக்கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும். இது தவிர கிணறு வெட்டுவதற்காகவும் 1000 ரூபா தனிக்கடன் வழங்கப்படும்.

---

## காங்கிரஸ்-ஜனசங்கம் கைகலப்பு

### மூவர் பலி

புதுடில்லி, பெப். 9

உத்தர பிரதேசத்தில் லுமாமோ என்ற இடத்தில் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் ஜனசங்க ஆதரவாளர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக 2 பேர் ஸ்தலத்திலும், ஒருவர் ஆஸ்பத்திரியிலும் மாண்டனர். மூவருக்குக் காயம் ஏற்பட்டது. இச் சம்பவத்தில் துப்பாக்கிகள் உபயோகிக்கப்பட்டன.

---

## ஆகஸ்ட் 6-ல் ஜமாய்க்கா சுதந்திரம்

லண்டன், பெப். 9

ஆகஸ்ட் 6-ம் திகதி ஜமாய்க்கா சுதந்திரம் அடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்துக்குப் பின் தொடர்ந்து, காமன்வெல்தில் இருக்க அது விருப்பம் தெரிவித்துள்ளது.

---

## 'நைட்கிளப்' நடைபெறுவது பற்றி கண்டனம்

ஹிண்டகல, வெள்ளி

கண்டியில் "நைட் கிளப்" நடைபெற்று வருவதற்கு கண்டனம் தெரிவித்து, கலாசார மந்திரிக்கு ஆறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளைகளும் தொழிற் சங்கங்களும் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

மகஜரில் தெரிவித்திருப்பதாவது:- "கண்டியில் இயங்கிவரும் 'நைட் கிளப்'பையகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். 'நைட்கி கிளப்' பினுல் கண்டியிலுள்ள பௌத்தமதங்களுக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது. அந்தகிளப், மல்வததை மகாவிகாரைக்கு ஒரு அவமதிப்புக் கொடுக்கக்கூடியதாகவுமிருக்கிறது."

கண்டி, பட்டஹிவஹெற்ற மாவட்டங்களைச் சேர்ந்தசாசனருக்ஷக மண்டலாவும் "நைட் கிளப்" நடைபெறுவதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளதுடன கலாச்சார, மந்திரிக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளது.

---

## ஆங்கிலம் 2-ம் மொழி பற்றி வகுப்பு

வவனியா, வெள்ளி

ஆங்கிலத்தை இரண்டாவது பாஷையாகப் படிப்பது சம்பந்தமாக ஓர் வகுப்பொன்றை வவனியா வித்தியாதிகாரி திருமதி ஆர். நவரத்தினம் நடத்துகின்றார். இவ்வகுப்பு வவனியா சிங்கள மகாவித்தியாலயத்தில் வருகிற 23-ம் 24-ம் திகதி நடைபெறும். முல்லைத்தீவு, மாங்குளம், வவனியா, முருங்கன், மன்னார் வட்டார வித்தியதரிசிகளின் பாடசாலைகளைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்கள் இவ்வகுப்பில் கலந்துகொள்வர்.

---

## ஆர்ஜன்டீனு நடவடிக்கை

ஹவாஞ, பெப். 9

கியுபாவுடனுள்ள ராஜதந்திர உறவை ஆர்ஜன்டீனு முறித்துக் கொண்டுவிட்டது. அமெரிக்கக் கண்ட ஸ்தாபனத்திலிருந்து கியூபா அகற்றப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆர்ஜன்டீனு, மகாநாட்டுத் தீர்மானங்களைக் கடைப்பிடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

## பெட்டிக்குள் நாகங்கள்!

மட்டக்களப்பு, வெள்ளி

உகணைக் கச்சேரியில் கடமையாற்றிவரும் ஒருவர், காலையில் எழுந்து தமது க்ஷவர அடுக்குகளை எடுப்பதற்கென அலை வைக்கப்பட்டிருந்தபெட்டிக்குள் ஏதோ வழுவழுப்பான குளிர்ந்த பொருள் பெட்டியுள் கிடந்ததை உணர்ந்தார். மின் விளக்கைப்போட்டு பார்த்ததின்பேரில் அங்கு ஒருநாகம் இருக்கக் கண்டார். கைத்துப்பாக்கி ஒன்றினுல் பாம்பைச் சுட்டபின்னர் இறந்த பாம்பினுடைய கூட்டாளியொன்றும் அங்குகிடந்து ஓடியதைக் கண்டார். துப்பாக்கிச்சத்தத்தினுல் இரண்டாவது நாகம் ஓடிவிட்டது.

---

## மாதத்தின் 3ம் வாரம்

### மாசி, கருவாடு விநியோகம்

கொழும்பு, வெள்ளி

மாசி, கருவாடு வாங்குபவர்கள் ஒவ்வொரு மாதத்தின் மூன்ரும் வாரத்திலும் வாங்கிக் கொள்ளவேண்டும். கூட்டுறவுக் கடைகள் மூலமாகவும், அங்கீகாரம்பெற்றுள்ள வியாபாரிகள் மூலமாகவும் மாசிக்கருவாடு விநியோகம் செய்யப்படும்.

பங்கீட்டு முறையின்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரவுன்ஸ் மாசி, கருவாடு பெற்றுக் கொள்ளலாம்' வியாபாரிகள் மாசி, கருவாட்டை விநியோகிக்க மறுத்தால் அது பற்றி உணவுக் கமிஷனருக்கு அறிவித்தல் செய்யப்படவேண்டும். அவ்வாறு விநியோகம் செய்யமறுத்த வியாபாரிகளின் லைசென்சுகளை உணவுக்கமிஷனர் ரத்துச் செய்யலாம்.

---

## அரசாங்க சேவையாளருக்கு 'யூனிபோம்'

கொழும்பு, வியாழன்

அரசாங்க சேவையாளருக்கு 'யூனிபோம்' உடைகளை வழங்குவதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கெனத் திறைசேரிக் காரியதரிசியால் நியமிக்கப்பட்ட கமிட்டி செய்துள்ள சிபார்சுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தால் அரசாங்கத்துக்கு சுமார் 750,000 ரூபாய் மேலும் செலவாகும்.

முப்பத்திரண்டு அரசாங்க இலாகாக்களிலுள்ள சேவையாளருக்கான 'யூனிபோம்' உடைகள்பற்றிக் கமிட்டி விரிவாக எடுத்துக் கூறியுள்ளது.

---

## யக்ஞ பூர்த்தி

யாழ்ப்பாணம், சனி

ஆனைக்கோட்டை ஸ்ரீமூத்த விநாயகர் தேவஸ்தானத்தில நாளை யக்ஞபூர்த்தியும், நாளை மறுதினம் 12ம் திகதி சங்காபிஷேகம், அன்னதானம் ஆகியவையும் நடைபெறும்.

## மணி வாக்கு

"சென்ற காலத்தைக் கருதி வாழாதே. எதிர் காலத்தைக் கருதி வாழுதே. ஆனல் இன்றே வாழ்; தொண்டாற்று: பிறரை நேசி".


ஈழநாடு
NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு தை மீ 28உ ( 10- 2 - 62)


## தொற்றுநோய் நிலையம்

அம்மை நோய் இலங்கையிம் பரவாதிருப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளில் அரசாங்கற் தீவிரமாக உழைத்து வருவது பாராட்டக் குரியது. யாழ்ப்பாணம் போன்ற பிற இடங்களிலும் சுகாதாரப் பகுதியினர் அம்மைப்பால் குத்தி வருகின்றனர். இப்பாது காப்பு நடவடிக்கை உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அனைவரும் வரவேற்பார்கள். இவ் வேளையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேயொரு தொற்று நோய் நிலையத்தின் கேவலமான நிலையை யாழ்ப்பாண உதவி மேயர் அரசினரதும் பொது மக்களினதும் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பது நல்லதொரு காரியமாகும்.

யாழ்ப்பாணத்திலுள்ள தொற்றுநோய் நிலையத்தின் கட்டடம் இடிந்து விழுகின்ற நிலையில் இருப்பதாகவும் இவ்வாறு பாழடைந்து கொண்டிருக்கும் ஒரு கட்டடத்தில் நோயாளர்களை வைத்துப் பராமரிப்பது எப்படிச் சாத்தியமாகும் எனவும் அவர் கருதுவது முற்றிலும் நியாயமானதே.

சகாதார வசதியற்ற ஒரு கட்டடத்தில் நோயாளர்களை அனுமதித்து எவ்வாறு சிகிச்சை செய்கின்றார்கள் என்பது அனைவருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்குவதாகும். இவற்றினுக்கும் மேலாக அங்குள்ள நோயாளருக்கு உதவியாக ஒரு தாதியே பணியாற்றி வருகின்றார் என்றால் நோயளர் எவ்வளவு தூரம் கஷ்டமுறுவார்சள் என்பதை நாம் இங்கு குறிப்பிடவேண்டியதில்லை. இப்போது சின்னம்மையாற் பீடிக்கப்பட்ட மூவர் அங்கு இருப்பதாகவும் அவர்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர் எனவும் அறிகின்றோம். இவர்களைச் சொந்த வீடுகளுக்கு அனுப்பவும் முடியாது. இந் நிலையில் இத்தகைய நோயாளர்களை நல்ல முறையில் பராமரிப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள தொற்றுநோய் நிலையத்தில் சுகாதார வசதிகள் கிடையாதாயின் அது உண்மையாகவே வெட்கப்பட வேண்டிய தொன்றாகும்.

பழுதடைந்த நிலையிலுள்ள சுவர்களையும் மழைபெய்யும் போது ஒழுகும் கூரையையும் உடைய ஒரு கட்டத்தை வைத்துக்கொண்டு நோயாளருக்கு சிகிச்சை செய்வதுவது அவர்களையே இழிவுபடுத்துபோலாகும். எனவே, பழுதடைந்துள்ள இக் கட்டடத்தை திருத்தி அமைப்பதற்கு அரசினர் ஆகவேண்டிய நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும். அத்துடன் புதிய தொரு கட்டடத்தை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளையும் ஆராய்வதற்கும் இது தருந்த சந்தர்ப்பமெனவும் கருதுகின்றோம்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் விசேஷ ஆலோசனைக் குழுவினரும் யாழ்ப்பாண மாநகரசபையினரும் இதில் தீவிர [illegible] செய்து நோயாளரின்

# மேனன்-கிருபாளினி போட்டி தீவிரமடைகிறது

## வடபம்பாய்த் தொகுதியில் ஏற்பட்டுள்ள சுறுசுறுப்பு

பம்பாய், பெப். 9

வடக்கு பம்பாய்த் தொகுதியில் நடைபெறவிருக்கும் கிருஷ்ணமேனன் – கிருபளானி போட்டிதான் இந்தியாவிலேயே மிகவும் முக்கியமான தேர்தல் போட்டி என்று மதிக்கப்படுகிறது. பெப்ரவரி 25உ இங்கு வாக்குப் பதிவு நடைபெறும். தேர்தல் தினம் நெருங்க, நெருங்க பிரசாரத்தின் வேகம் கடுமையாகிக்கொண்டிருக்கிறது.

இது நேரடிப் போட்டியல்ல. இவ்விருவரைத் தவிர, நாலு சுயேச்சை அபேட்சகர்களும், ஹிந்து மகாசபை, ராமராஜ்ய பரிஷத் அபேட்சகர்களும், ஆக மொத்தம் 6 பேர் போட்டி போடுகிறார்கள். ஆனல் இவர்களுடைய பிரசாரத்திற்கான அறிகுறி எதுவும் இதுவரை தென்படவில்லை. இவர்கள் உண்மையாகவேன் போட்டி போடுகிறார்களாவென்பதே சந்தேகமாயிருக்கிறது.

பாரதீய ஜனசங், பி. சோ. கட்சி, சுதந்திராக் கட்சி ஆகியவைகளும், மற்றும் பல பிரமுகர்களும், ஸ்ரீ கிருபளானியை ஆதரிக்கிறார்கள். ஸ்ரீ கிருஷ்ண மேனன் காங்கிரஸ அபேட்சகராக நிற்கிறார்.

ஸ்ரீ கிருபளானி, ஸ்ரீ மேனனுக்கு வெகு நாட்களுக்கு முன்னதாகவே, தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டார். சென்ற இரண்டு மாதங்களாக ஸ்ரீ கிருபளானி தனது தொகுதியில் தீவிரமாக வேலை செய்துகொண்டிருக்கிறார். வீடு வீடாகச் சென்றும், வோட்டு கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆனல் ஸ்ரீ மேனனின் பிரசாரம் ஜனவரி 15-க்குப் பின் தான் ஆரம்பமாயிற்று இதுவரை ஸ்ரீ மேனன் தொடர்ந்து அதிக நாட்கள் தன் தொகுதியில் தங்கியிருக்கவில்லை.

வடபம்பாய்த் தொகுதியில் இரு அபேட்சகர்களின் சார்பிலும், சுவரொட்டிகள் பிரசாரம் தீவிரமாகிக் கொண்டிருக்கிறது ரோடுக்குக் குறுக்கே கொடிகள் கட்டுவதைக் காரப்பரேஷன் தடை செய்திருக்கிறது.

"மேனனுக்கு வோட் போடுங்கள்: நேருவை ஆதரியுங்கள்" என்று காங்கிரஸ பிரசாரத் தட்டிகள் கூறுகின்றன.

"கம்யூனிஸடு ஊடுருவலையும், லஞ்ச ஊழலையும் ஒழிக்க கிருபளானிக்கு வோட்டுப் போடுங்கள்" என்று ஸ்ரீ கிருபளானியின் அட்டைகள் கூறுகின்றன.

சென்ற பொதுத் தேர்தலின் போது, மகாராஷ்டிரப் பிரிவினை சம்பந்தமான கிளர்ச்சி கடுமையாய் இருந்தது. ஆனல் இப்போது அம்மாதிரி உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய கிளர்ச்சி எதுவுமில்லை. ஆகையால், தேர்தல் பிரசாரம் இப்போது அமைதியாகவே நடந்து கொண்டிருக்கிறது.

பம்பாய் வாக்காளர்களில் சரி பாதிப்பேர் படித்தவர்கள். இங்கு சுமார் ஏழரை லட்சம் வோட்டர்கள் இருக்கிறார்கள். பம்பாய் ராஜ்யத்திலேயே மிகவும் பெரிய லோகசபைத் தொகுதி இதுதான். இத்தொகுதியில் மகாராஷ்டிரர்கள், குஜராத்திகள், பஞ்சாபிகள் தென்னிந்தியர்கள், வங்காளிகள், ஸிந்திகள், உத்திரப் பிரதேசக்காரர்கள் ஆகிய பல ராஜ்யக்காரர்களும் இருக்கிறார்கள்.

கஷ்டங்களை நீக்க முயலுவார்களெனநம்புகின்றோம்.

## அம்மைப்பால் கட்டப்படும்

தொல்புரம், சனி

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று காலை 9மணிக்கு அம்மை நோயைத் தடுக்கும்பொருட்டுச் சுகாதாரப் பரிசோதகரால் அம்மைநோய்த் தடுப்பூசி (பால் கட்டுதல்) போடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## ரம்சான் பெருநாளில் குத்தரிசி வழங்க ஏற்பாடு

### யாழ்ப்பாண எம். பி, நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

ரம்சான் பெருநாளை முன்னிட்டு அடுத்தவாரம் தொடக்கம் யாழ்ப்பாணப் பகுதியில் சென்றுண்டு போல பங்கீட்டரிசி குத்தரிசியாக வழங்கப்படுமெனத் தெரிகிறது.

இப்பொழுது கொடுக்கப்படும் பங்கீட்டரிசிக்குப் பதிலாக ரம்சானை முன்னிட்டு குத்தரிசி வழங்க வேண்டுமென யாழ்ப்பாண எம். பி. திரு. ஏ. டி. துரையப்பா உணவு இலாகாவிடம் கோரியிருந்தார்.

இக் கோரிக்கைக்கு அமைய திங்கட்கிழமை தொடக்கம் குத்தரிசி வழங்கப்படுமெனத் தெரிகிறது.

இரத்தினக் கம்பளம்

# இருபெரும் கீரகங்கள்

பதுமன்

எட்டுக்கிரகங்களின் சேர்க்கையால் உலகத்துக்கு நன்மையோ, தீமையோ ஏற்பட்டதாயில்லை. அன்றுபோல் இன்றும் அது வலம்வந்துகொண்டுதானிருக்கின்றது. இந்தச் சேர்க்கையினுல் விபரீதங்கள் எதுவும் நடைபெறமாட்டாதெனவும் உலகத்தின் நன்மைக்காகப் பிரார்த்தனைகள் செய்வது நல்லதெனவும் பெரியோர் கூறினர். இவ்வாறு இறைவழிபாடும், லட்சார்ச்சனைகளும் நடைபெற்ற காரணத்தினுலேயே விபரீதங்கள் ஏற்படவில்லையென தெய்வபக்தியிருந்தவர்கள் நம்புகின்றனர்.

### இரு கிரகங்கள்

வானவெளியில் இருக்கும் கோள்களால் உலகுக்குத் தீங்கு நேராதெனவும் பூமியிலுள்ள சில கிரகங்களால்தான் அதற்குத் தீமை விளையக் கூடும் என 'நவ இந்தியா' சுவையாக எழுதியிருக்கின்றது. இரண்டு பெரிய கிரகங்களின் போக்கு, அதன் தலைவிதியை நிர்ணயிப்பதாய் இருக்கிறது. இவற்றுள் ஒன்று அமெரிக்கா, இன்னென்று ரஷ்யா என அது குறிப்பிட்டுள்ளது.

### வக்கரித்தல்

இவை இரண்டும் ஒன்றுக்கொன்று வக்கரித்துக்கொண்டிருப்பதால் இன்று உலகுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் பல. எந்த நிமிஷமும் போர் மூளலாம் என்ற அபாயம் இருந்துகொண்டே இருக்கிறது. இவையல்லாமல் சீனு, பாகிஸதான் போன்ற வேறு சில துஷ்டகிரகங்களும் இருக்கின்றன. இவற்றின் பார்வை சுத்தமாக இல்லாததால், இந்தியா முதலானவற்றுக்கு வீண் தொல்லைகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆனல், வான்வெளியில் எட்டுக்கிரகங்கள் ஒன்றுகூடியதுபோல, இவைகளும் ஒன்றுகூடினல். எவ்வளவு நன்ருக இருக்கும்? அஷ்டகிரகச் சேர்க்கையால் பலாபலன்கள் இல்லாவிட்டாலும், இவற்றின் சேர்க்கையால் உலகம் நிச்சயமாக நன்மையடையும் என்பதில் மட்டும் சந்தேகமேயில்லை.

### நேருவும் விஞ்ஞானமும்

விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாத எதையும் குருட்டுத்தனமாக ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பது நேருஜியின் கருத்து. சூரியகிரகணம் ஏற்படும்போது கங்கையில் மூழ்கி ஸ்நானம் செய்வதைப்பற்றி நேருஜி கூறியதைக் கேளுங்கள்: "சூரியகிரகணம், சந்திரகிரகணம் எப்படி ஏற்படுகிறதென்பது குழந்தைகளுக்குக் கூடத்தெரியும். ஆனல் சூரியகிரகணம் ஏற்படும்போது ராகு என்ற பாம்பு விழுங்காமல் சூரியனைக் காப்பாற்ற அன்று இந்தியாவில் கங்கையில் பலர் மூழ்கிறார்கள்" இப்படி நேருஜி சென்ற வாரம் ஒரு கூட்டத்திற் பேசியபோது கூட்டத்தில் இருந்தவர்கள் அண்டங்குலுங்கச் சிரித்தார்களாம்.

### ஆமைக்கு கிராக்கி

சூரியனை ராகு என்ற பாம்பு விழுங்குவதைப்பற்றிக் குறிப்பிடும்போது ஆமை இறைச்சிக்கு ஐரோப்பிய நாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதாக வெளியாகியுள்ள செய்தி நினைவுக்கு வருகின்றது. ஆமை இறைச்சியை பத்திரப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அனுமதி தருமாறு வடபகுதியிலுள்ள வர்த்தக ஸதாபனம் ஒன்று அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

வடபகுதிக் கடலோரத்தில் ஆமைகள் அதிகமாகக் காணப்படுவதால் இவற்றின் இறைச்சியை ஏற்றுமதி செய்வதால் இலங்கையின் வருவாயை அதிகரிக்கலாம் என்பது உண்மைதான். ஆனல் அரசாங்கம் இது சம்பந்தமாகவும் ஆமை வேகத்தில் இயங்குமானல் துரித முன்னேற்றத்தை எப்படி எதிர்பார்க்கலாம்.

### யார், எவர்?

தமிழ் எழுத்தாளர்களுக்கு இந்நாட்களில் வந்துள்ள யோகம்தான் எவ்வளவு! அவர்களைப்பற்றிய விபரங்கள் அடங்கிய ஒரு நூல்கூட இன்று சென்னையில் வெளியிடப்பட்டுள்ளது. எழுத்து உலகின் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு உழைத்துவரும் 563 தமிழ் எழுத்தாளர்களைப்பற்றிய 'தமிழ் எழுத்தாளர் யார், எவர்?' எனும் நூலை தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் டி தயாரித்து வெளியிட்டுள்ளது. இந்நூலின் முதல்பிரதி தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவா திரு. அன்பு கணபதியிடம் சென்னை மேல்சபைத் தலைவர் டாக்டர் செரியனல் வழங்கப் பெற்றது. இதில் குறைந்தது ஒரு நூலாவது எழுதியுள்ள தமிழ் எழுத்தாளரின் பெயர் முகவரி, பிறப்பு, சிறப்புக்குறிப்புக்கள் முதலியவற்றைக் காணலாம். இதேபோல் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று தென்மொழிகளிலும் அந்தந்த மொழி எழுத்தாளர்களைப்பற்றிய தொகுப்பு நூல்கள் வெளிவர விருப்பதாக சென்னை எழுத்தாள அன்பர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

## "மதத் தலைவர்கள் அரசியலில் தலையிடக்கூடாது"

—நேரு

எர்ணாகுளம், பெப் 8

கேரளத்தில் பிஷப்புகளும், ஆர்ச் பிஷப்புகளும் கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு வோட்டுப்போட வேண்டாமென்று கேட்டுக் கொண்டு, திரிச்சபை கடிதம் எழுதியதை பிரதம மந்திரி நேரு, நேற்று நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் கண்டித்தார். அரசியல் வ்வகாரங்களில் தங்கள் கருத்தைத் தெரிவிப்பது அவர்களுக்கும், அரசாங்கத்துக்கும் சிக்கலான நிலையை உண்டாக்குமென்றார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"வாக்குகளைச் செலுத்துவதில் மதம், உத்தியோக முறையில் குறுக்கிடும் அபாயமிருக்கிறது. உங்களில் எவரும் கம்யூனிஸ்டுக்கு வோட்டுப் போடுவதை நானும் விரும்பவில்லை. பிஷப்புகள் கருத்தை நான் எதிர்க்கவுமில்லை. ஆனல் ஷ்தாபன ரீதியில் அரசியல் விவகாரங்களில் கருத்துத் தெரிவிப்பதைத்தான் நான் ஒப்புக்கொள்ளவில்லை."

## அஷ்டகிரக வாசிகசாலை

மட்டக்களப்பு, வெள்ளி

நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப்பின்பு நடைபெற்ற அஷ்டகிரகசேர்க்கையின் ஞாபகார்த்தமாக மட்டக்களப்பு கோட்டமுனை மகாவித்தியாலயத்தில் ஓர் புதிய வாசிகசாலை திறக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் திரு. கே. சிவசிதம்பரம் வாசிகசாலையைத்திறந்து வைத்தார் இவ்வாசிகசாலைக்கு அஷ்ட கிரகவாசிகசாலையெனப் பெயர்சூட்டப்பட்டுள்யது.

## ஆறுமுளையுள்ள அதிசய விதை

தெல்லிப்பழை, வெள்ளி

மாவிட்டபுரத்தைச்சேர்ந்த சுந்தரமூர்த்தி தனஞ்செயன் என்னும் பாடசாலை மாணவன் தனது வீட்டில் விதைத்த மாங்கன்றுவிதையொன்றில்இருந்து ஆறுமுளைகள் முளைத்துள்ளன. இந்த அதிசயமாங்கன்றினை மக்கள் பார்த்து அதிசயப்படுகின்றனர் ஆறுமுளைகவில் ஒருமுளையைச்சிறுவனெருவன் பிடுங்கியமையால் தற்போது ஐந்து முளைகளும் செழித்து வளருகின்றன.

## புத்தூர் கிராமசபையின் புதிய உபதலைவர்

கோப்பாய், வெள்ளி

புத்தூர் கிராம சபையின் இவ்வாண்டு உபதலைவராக2ம் வட்டார அங்கத்தவரான திரு. எம். திருநாவுக்கரசு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உபதலைவரைத்தெரிவுசெய்வதற்கான இச்சபையின் விடிசகூட்டம் கிராமசபைத்தலைவர் திரு. எஸ. நடராசா தலைமையில் நடைபெற்றது.

## வடிசாராயம் வைத்திருந்தவருக்கு அபராதம்

மாவிட்டபுரம், வெள்ளி

பலாலி தெற்கைச் சேர்ந்த திருமதி சிதம்பரன் குண்டுமணி என்பவர் ஒரு திரும் வடிசாராயம் வைத்திருந்ததாகக் காங்கேசன்துறை கலால் இலாகாவினரால் மல்லாகம் நீதிபதி முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு ரூபா 50 அபராதம் விதித்தார்.

# வேலையற்றிருக்கும் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர் கூட்டம்

## இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

வட இலங்கையில் வேலையற்றிருக்கும் பயிற்சிபெற்ற தமிழ் ஆசிரியர் சங்கக் கூட்டம், உபதலைவி செல்வி சிவபாக்கியம் சனகசபை தலைமையில் கூடிய போது காரியதரிசி திரு. நா. க. கணபதிப்பிள்ளை வட இலங்கையில் வேலையற்றிருப்போருடைய புள்ளிவிபரத்தைச் சபைக்குத் தெரிவித்தார்.

வடபகுதியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் எல்லோரையும் நாளைய தினம் ஒன்றுகூட்டி பல தீர்மானங்களைச் சமர்ப்பிப்பதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானங்கள் சில பின்வருமாறு:-

பயிற்சி பெற்று வெளியேறிய வரிசைக் கிரமப்படி நியமனம் வழங்கப்படவேண்டும்.

சாதி மத அடிப்படையில் நியமனம் வழங்கப்படுவது தடைசெய்யப்பட வேண்டும்.

ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீட்சை போட்டி அடிப்படையில் நடத்தப்பட்டது. பயிற்சி பெற்று வெளியேறும் போது திறமைக் கிரமப்படி வேலைக்குக் காத்திருப்போர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டது. ஆனால் இதை மீறியும், இன மத அடிப்படையிலும் நியமனம் வழங்கப்படுவது வருந்தத் தக்கது.

---

## சங்கரத்தையில் கிரக சாந்தி

சங்கரத்தை, புதன்

சங்கரத்தை ஸ்ரீ வீரபத்திர சாமி பத்திரகாளி அம்பாள் கோயிலில் சென்ற நான்குநாட்களாகதினமும்விஷேச அபிஷேகமும், பூசைஆராதனையும் அஷ்டகிரக சேயர்க்கையை முன்னிட்டு நடைபெற்றன. கோளறு பதிகமும் பாடப்பெற்றது. அன்னதானம் அளிக்கப்பட்டது.

---

## கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டன

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த சின்னப்பொடி செல்லன் என்பவரின் வயலில் இரண்டரை அடி உயரத்துக்கு வளர்ந்திருந்த கஞ்சாச் செடிகளை நேற்று காங்கேசன்துறை கலால் இலாகாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் டி. எல். ஜி. எட்வர்ட் தலைமையில் சென்ற கோஷ்டியினர் கைப்பற்றினர்.

சின்னப்பொடி செல்லனும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

---

## தொண்டமான் கேள்வி

கொழும்பு, வெள்ளி

நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமான் பிரதிநிதிகள் சபை கூடும்போது கல்வி மந்திரி திரு. பதியுதீன் மாமூத்திடம் கீழ்வரும் கேள்விகளைக் கேட்கவிருக்கிறார்.

1 கொழும்பிலுள்ள சேரி கல்லூரியில் தமிழ் மாணவர்கள் பகுதி ஒதுக்கப்பட்டு வருவதுபற்றியும், தமிழ் மாணவர்கள் அங்கு செல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்து வருவது பற்றியும் கல்வி மந்திரி அறிவாரா?

2 அங்கு ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமையை மாற்றக் கல்வி மந்திரி என்ன நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்?

வீடமைப்பு வேலைகள் நிறுத்தப்பட்ட காரணத்தால் தோட்டத்தொழிலாளருக்கு ஏற்பட்டுள்ள இடநெருக்கடிகள் பற்றியும் தோட்டத்தொழிலாளருக்கு வீடமைக்கும் திட்டமொன்றுக்கு உதவுவது பற்றியும் தொழில் தேசிய சேவை அமைச்சரிடம் திரு. தொண்டமான் கேள்விகள் கேட்கவிருக்கிறார்.

---

எலிஸபெத்வில்லி, பெப். 8

காங்கோ துருப்புக்கள் வட கடாங்காவில் கிராமவாசிகளை கிடங்குகள் வெட்டுமாறு பலவந்தப்படுத்தி, வெட்டப்பட்ட கிடங்கிற்குள் அவர்களை உயிரோடு போட்டு புதைத்தும், மற்றும் பல அக்கிரமங்களைச் செய்தும் வருவதாக கடாங்கா அரசாங்கம் புகார் கூறியுள்ளது.

---

# மக்கள் வங்கியின் ஒவ்வொரு கிளைக்கும் ஆலோசனைசபை

## நிர்வாகிகள் முடிவு

காலி, வெள்ளி

மக்கள்வங்கியின் ஒவ்வொரு கிளைகளும் ஒவ்வொரு உள்ளூர் ஆலோசனைக் கமிட்டியை நியமிப்பதென மக்கள் வங்கியின் நிர்வாகிகள் சபை தீர்மானித்துள்ளது. ஆலோசனைக் கமிட்டியின் தலைவராக அவ்வப் பகுதியின் அரசாங்க அதிபரோ அல்லது அவருடைய பிரதிநிதியோ கடமையாற்றுவார். கூட்டுறவு அபிவிருத்தியின் உதவிக் கமிஷனர், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதியொருவர், பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கத்தின் மூன்றுபிரதிநிதிகள் ஆகியோர் ஆலோசனைக் கமிட்டியில் அங்கத்துவம் பெறுவர்.

மேற்படி ஆலோசனைக் கமிட்டிகள் மாதமொருமுறை கூடும். குறித்த பகுதியிலுள்ள வங்கிக் கிளை மனேஜர் ஆலோசனைக் கமிட்டியின் செயலாளராகக் கடமையாற்றுவார்.

---

பார்லிமெண்ட்

## கலரி டிக்கட்டுக்கு ஏராளமானோர் விண்ணப்பம்

கொழும்பு, வெள்ளி

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 13-ம்திகதி ஜனப்பிரதிநிதிகள்சபை கூடும்பொழுது, கலரிகளில் ஆஜராகியிருக்கும் பொருட்டு ஏராளமானோர் கலரி டிக்கட்டுகளுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

கலரி டிக்கட்டுகள் கோரி பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கும் செனட்டர்களுக்கும் அவர்களின் நண்பர்களும் இனத்தவர்களும் விண்ணப்பித்துள்ளனர்.

எதிர் வரும் கூட்டத்துக்கு பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுறது.

---

# மண்டபம் முகாம் மூடப்படும்

## இந்தியாவுடன் பேச்சுநடத்த அதிகாரிகள் சென்றுள்ளனர்

கொழும்பு, வெள்ளி

மண்டபம் முகாமை மூடுவது பற்றிய இறுதி ஒழுங்குகள் அடுத்தவாரம் செய்யப்படவிருக்கின்றன. இந்திய அரசாங்கத்துடன் இது பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கென சுகாதாரசேவைகள் டைரக்டர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணரத்ன நேற்று இரவு இந்தியா சென்றுள்ளார். புதிய ஒழுங்கின்படி மண்டபம் முகாம் இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும். இந்திய அரசாங்கம் இது குறித்து இலங்கைக்கு வழங்கவிருக்கும் பணத்தொகை எவ்வளவு என்பது பற்றி வெகு விரைவில் தீர்மானம் செய்யப்படும். முகாமை நடாத்தி வந்த இலங்கையர்கள் இந்தியாவிடம் முகாம் ஒப்படைக்கப்பட்டதும் இலங்கை வந்து சேருவர்.

தொற்றுநோய் தடுப்புமுகாம் ஒன்றைத் தலைமன்னாரில் நிறுவுவதற்கு சுகாதார இலாகா முயற்சிகள் செய்து வருகிறது. மண்டபம் முகாமைப் போலவே இந்த முகாம் நடத்தப்படும்.

---

# எம். பி. க்களுக்கு பென்ஷன் வழங்குதல்

## அரசியல் தலைவர்களின் கருத்து கோரப்படுகிறது

கொழும்பு, வெள்ளி

பார்லிமெண்ட் அங்கத்தவர்களின் பென்ஷன் திட்டம்பற்றி தங்களது கருத்துக்களைத்தெரிவிக்கும்படி, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் ஜனப்பிரதிநிதிகள் சபை சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல கடிதம்மூலம் கேட்டுள்ளார்.

பென்ஷன் திட்டம்பற்றி சபைக்கமிட்டி கொண்டுவந்த முடிவிற்கிணங்க சபாநாயகர் திரு. பெல்பொல கட்சித் தலைவர்களுடன் முன்னர் கலந்து பேசினார்.

முன்னாள் மந்திரி திரு. சி, டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா பென்ஷன்கோரி விண்ணப்பித்திருந்ததைத் தொடர்ந்து மந்திரிசபைக்கு அவ்விஷயத்தைக் கொண்டுவரவேண்டும் என்று சபைக்கமிட்டி முடிவுசெய்திருந்தது.

---

## கோமகனுக்கு முன் மீண்டும் ஆர்ப்பாட்டம்

லண்டன், பெப். 9

பிரிட்டிஷ் கயானாவுக்கு விஜயம் செய்திருக்கும் எடின்பார கோமகனுக்கு முன்னிலையில் இரண்டாது தடவையாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஓரிடத்தில் பிரதமர் டாக்டர் செட்டி ஜகனை ஆர்ப்பாட்டக்காரர்கள் இழுத்துத் தள்ளியதாக அறிவிக்கப்பட்டது.

---

கெய்ரோ, பெப். 8

இப்பொழுது ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸருடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ இம்மாத மத்தியில் சூடானுக்கு விஜயம் செய்வார்.

---

# மதுஅருந்திய மூவர் திடீரென மரணம்

## சாவகச்சேரியில் பரிதாப சம்பவம்

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி தொகுதியிலுள்ள தனங்கிளப்பு என்னுமிடத்தில் ஒருபனைமரத்து கள் மூன்று பேரது உயிரைப் பலிகொண்ட பரிதாப சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது.

வேலைகளிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த செல்லப்பா ஆறுமுகம், சின்னத்தம்பி, கந்தையா, பண்டாரி சுப்பன், ஆகிய மூவரும் ஒரு பனையில் கள் இறக்கிக் குடித்தனரெனவும், இவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் ஒருவர் குடித்த இடத்திற்கு அண்மையிலும், மற்றவர் வீட்டிற்கு அண்மையிலும் மற்றவர் றோட்டிலுமாக விழுந்து இறந்தனர், எனவும் தெரிகிறது.

சாவகச்சேரி மாஜிஸ்டிரட் திரு. ஏ. வைத்தியலிங்கம் மரண விசாரணை நடத்தினர். சாவகச்சேரி வைத்திய சுகாதார அதிகாரி பிரேதப் பரிசோதனை நடத்தினர்.

---

## மாரடைப்பில் திடீர் மரணம்

உடுப்பிட்டி, வியாழன்

கரவெட்டி தபாற்கந்தோரில் கடமையாற்றும் தம்பையா மயில்வாகனம் என்னும் 22 வயது வாலிபன் புதன் கிழமை பிற்பகல் மாரடைப்பால் திடீர் மரணமானர். புதன் கிழமை அதிகாலை தொடக்கம் தனது கடமைகளை இவர்செய்து வந்திருக்கிறாரென்பது குறிப்பிடத்தக்கது.

---

## வெட்டி கொலை செய்ததாய் வழக்கு

### சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

மாவிட்டபுரம், வியாழன்

சங்கானையைச் சேர்ந்த வேலன் பழனி என்பவரை கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 25-ம் திகதி கோடரியால் வெட்டிக் கொலைசெய்ததாக அவரது மனைவியான பழனி சின்னத்தங்கம் என்பவர்மேல் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி., தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு, சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டபின் சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

டாக்டர் மயில்வாகனம் முருகேசம்பிள்ளை சாட்சியமளிக்கையில் பழனி சின்னத்தங்கம் என்னும் பெண்மணியை சங்கானைப் பொலிஸ் அதிகாரி தன்முன் ஆஜர்செய்து அவரை பரிசோதிக்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரைப் பரிசோதித்ததாயும் அவரின் உடம்பில் எவ்வித காயமும் காணப்படவில்லை என்றும் கூறினர்.

---

மரணவிசாரணை அதிகாரி திரு கே. தம்பிப்பிள்ளை மாரடைப்பினல் ஏற்பட்ட மரணமென்த்தீர்ப்பளித்தார்.

---

## நாட்டுவைத்தியத்துக்கு ஆங்கிலவைத்தியம் இணையாகாது

### பட்டினசங்கத் தலைவர்பேச்சு

தெல்லிப்பழை, வெள்ளி

'சுதேச வைத்திய தொழிலை யாவரும் ஆதரிக்கவேண்டும். நமது நாட்டுக்கு உகந்த வைத்தியம் ஆயுள்வேதமுறையாகும். சிறந்த முறையில் நமது முன்னோர்கள் கையாண்டுவந்தஇவ் வைத்தியத்தை நாமனைவரும் ஆதரிக்கவேண்டும். ஆங்கில வைத்திய முறைகள் சிறப்பாக விஞ்ஞான முறைப்படி கண்டுபிடிக்கப்பட்டபோதிலும் நமது நாட்டு வைத்தியத்தின் சிறப்புக்கு அவை ஈடாகாது. நோயைப் பூரணமாக அகற்றும் ஆற்றல் வாய்ந்ததுநாட்டுவைத்தியம். இதனை அனைவரும் உணரவேண்டும்.'

மாவிட்டபுரத்தில் நேற்றுக் காலை சுதேசவைத்தியசாலையை திறந்துவைத்துப் பேசுகையில் காங்கேசன்துறைப் பட்டின சங்கத்தலைவர் திரு. அ. இராசரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

ஆசிரியர் திரு. கு. கந்தையா நாட்டுவைத்தியத்தின் சிறப்பை விளக்கிப்பேசினர். ஆயுள்வேத வைத்திய கலாநிதி திரு. இ. அம்பலவாணர் நன்றிதெரிவித்தார்.

---

## தமிழ்ப் பேராசிரியர் இலங்கை விஜயம்

கொழும்பு, வெள்ளி

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியரும், ஸ்ரீகுமரகுருபரர் வழியில் தோன்றிய ஸ்ரீ காசிமடத்தைச் சேர்ந்தவருமான வித்துவான் மு. சுந்தரேசம்பிள்ளை அடுத்த மாதம் முதல்வாரத்தில் கொம்பனித்தெரு ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறும் மகாசிவராத்திரி விழாற்கு விஜயம்செய்வார்.

---

# ஒருவர் மாண்டார்

## மூவருக்கு படுகாயம்

### கோர்ட்டிலிருந்து திரும்புகையில் கைகலப்பு

சாவகச்சேரி, வெள்ளி

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி மஜிஸ்ரேட் கோர்ட்டில் விசாரணை முடிந்தபின் வாதி, பிரதிவாதி கோஷ்டியினர் வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்த போது இரு கோஷ்டிகளுக்கிடையேயும் பலத்த கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

ஒரு கோஷ்டியினர் சண்டைக்கு ஆயத்தமாக ஆயுதங்களை முன்னடியே கொண்டுவந்து ஒளித்து வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது. கோர்ட்டிலிருந்து அரைமைல் தூரத்தில் உள்ள பெரிய மாவடியில் இரு பகுதியாருக்கிடையில் நடைபெற்ற கைகலப்பில் கணபதி பொன்னு என்பவர் ஸ்தலத்திலேயே மாண்டார். அவரின் இரு சகோதரர்களான கணபதி செல்லன், கணபதி செல்லையா ஆகிய இருவரும் படுகாயங்களுடன் சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற அனுமதிக்கப் பட்டிருக்கின்றனர்.

மறுகோஷ்டியினரில் வைத்திலிங்கம் கனகரத்தினமென்பவர் படுகாயத்துடன் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# உண்டவீட்டுக்கு இரண்டகம்செய்தாராம்

## நஞ்சுகொடுத்து களவெடுக்க முயன்றதாய் வழக்கு

கம்பஹா, வெள்ளி

வேலைதேடித் திரிந்த இனம் தெரியாத ஒருவருக்கு, ஒரு வீட்டில் சாப்பாடும், தங்க இடவசதியும் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த நபர் வீட்டில் இருந்தவர்களுக்கு நஞ்சு கொடுத்து வீட்டையே களவாடத் துணிந்துவிட்டார்!

கம்பஹா அடிஷனல் மாஜிஸ்திரேட் திரு. எஸ். டி. ஜயசுந்தரா முன்னிலையில் டொம்பேபொலிஸாரினால் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது.

டெகத்தன, பனன்பெல என்ற இடத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் திரு. மந்திரி ரத்ன அவரது வீட்டில் இருந்த சமயம், மாத்தறையைச் சேர்ந்த ஜோன் அபயசூரியா என்ற இனம் தெரியாத நபர் வேலை தேடி அங்கு வந்தார். விபரம் அறிந்த திரு. மந்திரி ரத்ன, பொருத்தமான வேலை எதுவும் இல்லை என்று கூறி, 50 சதம் கொடுத்து போகும்படி சொன்னார்.

அபயசூரியா அந்த இடத்தைவிட்டு நழுவி வேறு ஒரு வீட்டுக்குச் சென்று தமக்கு வேலைதரும்படி கேட்டார். அங்கும் அவருக்கு வேலை காலி இல்லை என்ற பதில் தான் கிடைத்தது. அபயசூரியா மீண்டும் திரு. மந்திரி ரத்ன வீட்டுக்குச் சென்று, மன்றாடி, இரண்டு நாட்களுக்குத் தங்கியிருந்தார். நேரத்தை [illegible]ளிப்பதற்கு அந்த வீட்டுத் தோட்டத்தில் அபயசூரியா வேலை செய்து வந்தார். பெப்ரவரி மாதம் 3-ம் திகதி வீட்டு அடுக்களைக்குச் சென்று சுருட்டொன்றை பற்றவைப்பதுபோல் அபயசூரியா பாசாங்கு செய்தார்.

பொலிஸார் மேலும் தெரிவிக்கையில், அன்று இரவு தயார் செய்யப்பட்டிருந்த சாப்பாட்டில், அபயசூரியா நஞ்சு கலந்திருக்கிறான் என்று கூறினர்.

வழக்கம் போல, திரு. மந்திரி ரத்னவும் மற்றவர்களும் அன்று இரவு சாப்பிட்ட சிறிது நேரத்தில், வாந்தி எடுக்க ஆரம்பித்தனர். அப்பொழுது அபயசூரியா அவர்களுக்கு கோப்பி தயார் பண்ணிக் கொடுத்தான்.

சிறிது நேரத்திற்குப் பின்னர், அபயசூரியா அந்த வீட்டின் விளக்குகளை அணைத்துவிட்டு அலுமாரியைத் திறந்து சில பொருட்களை "அபேஸ்" பண்ண முயற்சித்தான் எதிர்பாராத விதமாக அயலில் உள்ளவர்கள் அங்கு வரவே அபயசூரியா ஓட்டம் பிடிக்கத் தொடங்கினன்.

பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த ஒரு முறையீட்டைத் தொடர்ந்து, சம்பவம் நடைபெற்ற அதே இரவு, சார்ஜண்ட் ராஜி, திரு. மந்திரி ரத்ன வீட்டுக்குச் சென்றார். அங்கு எல்லோரும் வாந்தி எடுத்துக்கொண்டிருப்பதை திரு ராஜி கண்டார். அந்த வீட்டின நாயும் வாந்தி எடுத்தது! திரு. ராஜி, அவர்கள் எல்லோரையும் உடனடியாக டொம்பே ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்.

அபயசூரியா பெப்ரவரி மாதம் 13-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டார்.

## நல்லூர் கிராமசபை உபதலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் கிராமசபையின் இவ்வருடத்திற்கான உபதலைவர் தேர்தல் இம்மாதம் 10-ம் திகதி நடைபெறுமென அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பென்ஷன் வழங்குவதில் தாமதம்

கொழும்பு, வியாழன்

வருமானவரி அதிகாரிகள் அனுப்பி வைக்கும் பென்ஷன் தஸ்தாவேஜுகளில் பல குறைகள் காணப்படுவதாக ஆடிட்டர் ஜெனரல் திறைசேரிக்கு முறையிட்டுள்ளார்.

தஸ்தாவேஜுக்கள் சரியாக நிரப்பப்படாததால் இளைப்பாறிய அரசாங்க சேவையாளருக்குப் பென்ஷன் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகத் தெரிகிறது.

நிர்ச்சட்ட நியதிகளின்படி உத்தரவாதச் சீட்டுக்கள் (வவுச்சர்) முறைப்படி குறிக்கப்படுவதில்லை எனவும் அவை பென்ஷன் பெறுபவர்களுக்கு அனுப்பப்பட்டு வைக்கப்பட்டால் அதுபற்றிய குறிப்புகள் எழுதி வைக்கப்படுவதில்லையென்றும் ஆடிட்டர் ஜெனரல் குறிப்பிட்டுள்ளார்.

பென்ஷன் தஸ்தாவேஜுகள் அரைகுறையாக அனுப்பப்படுவதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கும்படி திறைசேரியின் உதவிக்காரியதரிசி திரு. சி. பாலசிங்கம் அரசாங்க அதிபர்களை கேட்டுள்ளார்.

சதித்திட்டம்

## நேற்று எவரும் கைதாகவில்லை

கொழும்பு, வெள்ளி

தோல்வியடைந்துள்ள புரட்சிச் சதியையொட்டி நேற்று புதிதாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 29 ஆகும்.

## பாடசாலை மூடப்பட்டது

பூந்தோட்டம், வெள்ளி

வவனியா பூந்தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அக்கிராமத்தில் ஏற்பட்டுள்ள தொற்றுநோய் காரணமாக இம்மாதம் 7-ந் திகதி தொடக்கம் 19 வரை மூடப்பட்டுள்ளதாக தலைமை ஆசிரியர் சகல பெற்றோருக்கும் அறிவித்துள்ளதுடன் தடுப்பு நடவடிக்கையும் எடுத்துள்ளார்.

## ரூ. 200 அபராதம்

மாத்தளை, வெள்ளி

ஒரு இறுத்தல் இறைச்சியை கட்டுப்பாட்டு விலைக்கு 10 சதம் கூடுதலாக விற்பனை செய்ததாக மாத்தளையைச் சேர்ந்த ஏ. அபூபக்கர், எம். ஜெயினுதீன் ஆகிய இரு கசாப்புக் கடைக்காரர்மீதும் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மாத்தளை மாஜிஸ்திரேட் திரு. ஏ. ஓ. எஸ். திசநாயக்கா, குற்றவாளிகளாகக்கண்ட இருவருக்கும் தலா 200 ரூபா அபராதம் விதித்தார்.

# பாடசாலைகளில் ஒழுங்கீனம் சமூக சூழலே காரணம்

—திரு. வி. தியாகராஜா

மானிப்பாய், வெள்ளி

'பாடசாலைகளில் இப்பொழுது ஒழுங்கீனங்கள் மலிந்துவிட்டன. சூழல்சரியாக இல்லாதபோது கல்வி நிலையங்கள் எவ்வாறு ஒழுங்காக இயங்க முடியும்? இந்த ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக சிலர் ஆசிரியர்களைக் குறைகூறுகின்றனர். ஆனால் சமூகத்தில் குறைபாடுகள் பெருகியிருக்கையில் அவர்களைக் குறைகூறுவது சரியல்ல என நான் கூறுவேன்.

இவ்வாறு மானிப்பாய் விவேகானந்தா பாடசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் இராசவாசல் முதலியார் வி. தியாகராஜா குறிப்பிட்டார்.

விவேகானந்தா பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்பதை முன்னிட்டு நடைபெற்ற கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே திரு. தியாகராசா மேற்கண்டவாறு கூறினர்.

திரு தியாகராஜா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

கல்வி நல்லவகையில் பயன்தரக்கூடியதாக இருக்க வேண்டுமாயின் சமய அடிப்படையில் கல்வி போதிக்கப்படவேண்டும். இவ்விதக் கல்வியே நல்ல பிரஜைகளை உருவாக்கும். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ருல் சமயக்கல்வி மறைந்துவிடும் என சிலர் எண்ணுகின்றனர்கள். ஆனல் அரசாங்கம் பொறுப்பேற்றபாடசாலைகளில் தான் முறையான சமயக்கல்வி போதிக்கப்படுமென நான் கருதுகிறேன்.

கல்விப் பரிசோதகர் திரு. என். விசுவலிங்கத்திடம் பாடசாலை மனேஜர் திருமதி.எஸ். கே. சுவாமிநாதன் பாடசாலைத் திறப்புகளை ஒப்படைத்தார்.

பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. கே. குழந்தைவேலு நன்றிதெரிவித்துப் பேசினர்.

## வாக்காளர் இடாப்பில் பெயர்கள் இல்லை

### நகரசபை கூட்டத்தில் புகார்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு நகரசபையில் புதிய வாக்காளர் இடாப்புகளில் பல வாக்காளர்களின் பெயர்கள் மறைந்துவிட்ட மர்மம் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, நகரசபை மாதாந்த கூட்டத்தில் திரு. ஆர். கதிரவேலு குறிப்பிட்டார்.

திரு. ஜே. எல். திஸவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், வாக்காளர்களின் பெயர்கள் மறைந்திருப்பது மிகவும் பாரதூரமான செயலென்றும், இவ்விஷயத்தை தேர்தல் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும், திரு எஸ். கணேசமூர்த்தி, திரு. எஸ். ஜேம்ஸ், எஸ். குழந்தைவேல், திரு. பீ. எஸ். கனகசபை ஆகியோரும் வற்புறுத்திக் கூறினர்.

## சின்னமடு பாடசாலை

ஊர்காவற்றுறை, வெள்ளி

சமீபத்தில் ஏற்பட்ட சூருவளிக்காற்றினால் விழுந்துதரைமட்டமான சரவணை 'சின்னமடு' றோமன் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலையைக் கல்வி அதிகாரி திரு. தணிகாசலம் சென்ற புதன்கிழமை பார்வையிட்டார்.

விழுந்த பாடசாலையை உடனடியாக அமைப்பதற்கு பெற்றோர் ஆசிரியர் சங்கமும் முயற்சி எடுக்கவேண்டுமெனக் கல்வி அதிகாரி தெரிவித்தார்

ட எனக்குப் பிரியம். ருசி. தினந்தோறும் அம்மா எனக்கு விதம் விதமாக மாமைட் தருகிறார்கள்





நாம் யாவரும் நன்ருய் சாப்பிடுகிறோம். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறோம். பலத்திற்கும்வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும் பொழுது அதிகப் படியானருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




மாமைட்

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

சனி 10-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம். 5-45 திரை இசை 6-15 பாங்கு, 6-45, எஸ். வேலாயுதம்—பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 என். இராஜு—பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

ஞாயிறு 11-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 தேர்ந்த இசை, 8-15 தமிழ்மூலம் சிங்களம்-20, 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைக்குரல், 6-15 பாங்கு, 6-30 மனோரஞ்சிதம் லோகேஸ்வரம்-கோட்டு வாத்தியம்.

இரவு 7-00 மாதர் கேட்டவை, 7-30 தனேஸ்வரி முத்துக்குமாரு என். நாகலிங்கம்—பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி.

இரவு 9-15 'எல்லாம் கலைதான்'—நாடகம், 9-45 தேர்ந்த இசை 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

சனி 10-2-62

காலை 6-45 மங்கள இசை0, 6-50 துதிப்பாடல்கள், 7-0 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்பகள், 7-30 ஏபுதாப்பூர் எஸ். ஸ்ரீநிவாசன்—வயிலின்.

பகல் 100 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல் இசை, 2-10 ஏத்தாப்பூர் எஸ். ஸ்ரீநிவாசன்—வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'ரோஜாவின் அத்தர்'—நாடகம், 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

ஞாயிறு 11-2-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ராமநாதபுரம் எம். என். நடராஜ பிள்ளை—புல்லாங்குழல், 8-15 பி. வி. ராமன், பி. வி. லட்சுமணன்—பாட்டு

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி—கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சிதம்பரம் கே. கோமதிஅம்மாள்-பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 போழக்குடி பி. வி. கணேசய்யர், கே. ராமய்யா—பாட்டு, 8-30 ராமநாதபுரம் எம். என். நடராஜ பிள்ளை—புல்லாங்குழல்.

இரவு 9-15 வாத்திய இசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஒலிப்பதிவுகள்.

## "பௌத்த சங்கத்தை தேசிய மயமாக்க முயல்கிறது"

### அரசாங்கத்தின்மீது திரு. ஆர். ஜி. புகார்

பொல்காவலை, வெள்ளி

"பௌத்த பிக்குகளிடையே எதிர்ப்பைத் தூண்டி, பௌத்த சங்கத்தை தேசிய மயமாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி பண்ணுகிறது." என்று காவட்டல்வத்தை விவல என்ற இடத்தில் நடைபெற்ற சட்ட மொன்றில் தம்பதெனியா எம். பி திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:- 'ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட வேண்டும். அரசியல சம்பந்தமான சில பாடங்களை ஆசிரியர்கள் குழந்தைகளுக்குப் போதிக்கும் சமயத்தில் அரசியலிலிருந்து ஆசிரியர்கள் விலகிக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் ஆசிரியர்களை கேட்பது நம்பமுடியாத ஒரு விஷயமாக இருக்கிறது."

## புங்குடுதீவில் தையல நிலையம்

வேலணை, வெள்ளி

புங்குடுதீவு கிழக்குப் பகுதியில் புங்குடுதீவு முத்தமிழ் மன்றத்தினர் ஒரு தையல் நிலையத்தை நிறுவியுள்ளனர்.

## சுபாஷ் கழக கூட்டம்

வவனியா, வெள்ளி

"கழகத்தின் முன்னேற்றம் அங்கத்தவர்களிடமே தங்கியுள்ளது. கழகத்தின் முன்னேற்றத்திற்காகவும், மேன்மைக்காகவும் அங்கத்தவர்கள் ஒத்துழைத்தல் அவசியம்" என வவனியா சுபாஷ் கழகத்தின் 2-வது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய கழகத் தலைவர் திரு. கா. வேலுப்பிள்ளை கூறினர்.

காரியதரிசியினலும், தனதிகாரியினலும் அறிக்கை, வரவு, செலவு, என்பன வாசிக்கப்பட்டுச் சபையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## விவசாய கழக நிர்வாகிகள் தெரிவு

வவனியா, வெள்ளி

வவனியா, ஒட்டிசுட்டான் இளைஞர்விவசாயக் கழகக் கூட்டம் தலைவர் திரு. இ. வேசவனம் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தராக கீழ்க்கண்டோர் சபையோரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. இ. வேசவனம் காரியதரிசி: திரு. செ. தர்மலிங்கம். தனதிகாரிசு திரு. இ. தரமூர்த்தி. 5 பேர்கள் நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.



## அலுவலாளர் தெரிவு

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை இளம் தமிழர் இயக்கத்தின் புதுவருட அலுவலாளர் தெரிவில் கீழ்க்கண்டோர் 1962-ம்ஆண்டு நிர்வாகஸ்தர்களாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: நா. பாலசுப்பிரமணியம். உபதலைவர்: சி. செல்வரத்தினம்.காரியதரிசிகள்: நா.கருணந்தசிவம்,நா. ஜெயசீலன். தனதிகாரிகள்: க. முருகப்பெருமாள். பொ. விவேகானந்தன்.

ஆறுபேர் கொண்டநிர்வாக கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.




**குஞ்சு பொரிப்பதற்கு முட்டைகள்**

ஏற்றுக்கொள்ளப்படும்

முட்டை ஒன்றிற்கு

**சதம் – 20 மட்டுமே**

**உடன் யாழ் குஞ்சுகள்**

**ஒருகிழமை யாழ்குஞ்சுகள்**

வைற் லெக்கோன், பார்ட் பிலிமத் ரெக் ஆகிய அதிக முட்டை இடும் ஜப்பானிய இனங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

**யாழ் குஞ்சு–உற்பவகம்**

இல. 3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர் சு. சத்தியலிங்கம்


நடிகை

# ஜேன் மான்ஸ்பீல்ட் கடலில் மூழ்கினர்?

நாசௌ--பெப் 8

ரோஸ் ஜலண்ட் எனப்படும் தீவுக்கரையில் நீச்சலுக்குச் சென்ற பிரபல சினிமா நடிகை ஜேன்மான்ஸ பீல்டும் அவரது கணவர் மிக்கிஹாயிட்டேயும் கடலில் மூழ்கிவிட்டார்கள் எனக்கருதி பல வள்ளங்கள் அவர்களைத் தேடிச் சென்றன.

அவர்கள் இருவரும் நீச்சல் விளையாட்டுக்கு உபயோகித்த சிறு வள்ளம் கவிழ்ந்து கடலில் மிதந்ததாக மீன்பிடித் தொழிலாளி ஒருவர் கூறிய தன் பேரில் வள்ளங்கள் விரைந்து அவர்களைக் கடலில் தேட ஆரம்பித்தன.

ஜேன் மான்ஸபீல்டையும் அவரது கணவரையும் இன்னும் கண்டுபிடித்ததாகவில்லை 28 வயதடைந்த நடிகைக்கு 3 குழந்தைகள் உள்ளனர். அவரது கணவர் 1958-ம் ஆண்டில் உலகத்தில் அழகானவர் எனக் கொள்ளப்பட்டார்.

---

முள்ளியவளை ,வெள்ளி

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரர் இளம் விவசாயிகள் கழகத்தின் உத்தியோகத்தராகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. இ. வேகாவனம், செயலாளர்: திரு. செ. தருமலிங்கம், பொருளாளர்: திரு. இ. சுந்தரமூர்த்தி, நிர்வாக உறுப்பினர்கள்: திருவாளர்கள் பொ. ஜெயஞானசேகரம், ச. தில்லைநடராசா, செல்விகள் சி. நவமணிதேவி, சி. நாகேஸவரி.


## பண்டித வகுப்புக்கள்

யா. ஆ. தி. பா. வி. சங்கத்தால் நடத்தப்படும் பண்டித, பாலபண்டித வகுப்புக்கள், 3—3—62 சனிக்கிழமை வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் மீண்டும் ஆரம்பமாகி வழமைபோல் நடைபெறும் மிகத் திறமைவாய்ந்தவர்கள் கற்பிப்பார்கள். வகுப்புக்களிற் சேர்ந்து படிக்க விரும்புவோர், 28-2-62 க்குமுன் காரியதரிசிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஆர். எஸ். பாமர்,
காரியதரிசி.

கல்விக்கந்தோர்,
யாழ்ப்பாணம்.
3-2-62.


## புதிய விட்டு வரி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கால் சதவிகிதத்திற்கு அதிகமாயிருக்கக் கூடாது" என்னும் தீர்மானம் மாநகர சபையின் நேற்றைய கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இப்பிரேரணையை திருவாளர்கள் பி. எஸ். சோமசுந்தரம், எம். யேக்கப், ஏ. ஜி. இராஜசூரியர், ஜே. எஸ். அழகையா, என். டி. செல்லத்துரை, எஸ். இராசரத்தினம், டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் ஆகியோர் கூட்டாகக் கொண்டுவந்திருந்தனர்.

கூட்டம் மேயர் திரு. டி. எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்றது.

இம்மாநகர சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மாநகர சபைக்கும் இலங்கை கட்டிட வேலைப் பொறியியல் ஸ்தாபனத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தைப் பற்றி சட்ட அறிஞர்கள் திரு. சி. இரங்கநாதன், எச். வி. பெரேரா ஆகியவர்களின் அபிப்பிராயம் பற்றியும் பிரஸ்தாப ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதுபற்றியும் ஆலோசிக்கப்பட்டது. இது சம்பந்தமாக நீண்ட நேர ஆலோசனையின் பின் திரு. ஜே. எஸ். அழகையா கொண்டு வந்த பின் வரும் பிரேரணையை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

### புதிய சந்தைக்கு முறையான ஒப்பந்தம்

"மாநகர சபைக்கும் இலங்கை கட்டிட வேலைப் பொறியியல் ஸ்தாபனத்துக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் குறித்து திருவாளர்கள் சி. இரங்கநாதன், எச். வி. பெரேரா ஆகியோர் அவ் ஒப்பந்தம் செல்லுபடியற்றது என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இதனை அனுசரித்து மேற்படி ஸ்தாபனத்தாரிடமிருந்து சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் குறித்து சட்டபூர்வமான இரத்து ஒப்புதல் பெறவேண்டும். இன்றேல் ஏற்ற நீதிஸ்தலத்தில் அவ்வொப்பந்தம் செல்லுபடியற்றது என்று தீர்ப்புப் பெற வேண்டும். அதன் பின்னரே புதுமாதிரிச் சந்தை கட்டுவதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படவேண்டுமென்றும்,முறையான ஒப்பந்தம்செய்யப்பட வேண்டுமென்றும் இச்சபை தீர்மானிக்கின்றது."

### மின்சார என்ஜினியர் பதவி நீடிப்பு

யாழ்ப்பாண மாநகர சபையின் மின்சார பொறியியலாளர் வேலையை நசுக்குவதுபற்றி உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையிடமிருந்து கிடைத்த கடிதம்பற்றி ஆலோசிக்கப்பட்டது. இப்பதவியை நசுக்கவேண்டுமென சில அங்கத்தவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

திரு. ஏ. ஜி இராஜசூரியர் மின்சார பொறியியலாளருக்கு ஓர் 6 மாதத் தவணை கொடுத்து மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். வரியிறுப்பாளருக்கு போதிய மின்சார வசதி செய்து கொடுக்கத் தவறி விட்டாரென டாக்டர் தருமலிங்கம் இதனைப் பலமாக எதிர்த்தார். இந்நிலையில் மேயர் இப்பொழுது மின்சார விநியோகத்தில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். மாநகர சபைக் கமிஷனர் திரு. ஜெயசிங்கா, மின்சார என்ஜினியர் போதிய ஒத்துழைப்புத் தருவதாக உறுதி கூறியிருப்பதாகத் தெரிவித்தார்.

## தொழிற் சங்க முறையீட்டை ஆராய பிரத்யேக குழு

கொழும்பு, வெள்ளி

தொழிற் சங்கங்களின் முறையீடுகள்பற்றி தொடர்புபடுத்தி ஆராய்வதற்கு ஒரு பிரத்தியேக குழுவை அமைப்பதெனத் திறைசேரி தீர்மானித்துள்ளது. திறைசேரியில்இப்போது கடமையாற்றிவரும் சிவில்சேவையாளர் இந்தப்பிரத்தியேக குழுவின் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்.

அரசாங்கத்துக்கும் தொழிற் சங்கங்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேற்படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

---

இடமாற்ற உத்தரவு ஒன்று வரும்வரையில் மின்சார என்ஜினியரின் பதவிக் காலத்தை நீடிப்பதெனவும், அவரது வேலை சம்பந்தமாக மாதாந்த அறிக்கையை கமிஷனர் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது.

மரணதண்டனை விசேஷ மசோதாவை வாபஸ்பெற வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும். திரு ஆ. துரைராசசிங்கம் கொண்டு வந்த பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது.

## அச்சுக்கூடங்கள்

### புதிய சட்டங்கள் பிரகடனம்

கொழும்பு, வெள்ளி

அச்சுக்கூடங்கள் சம்பந்தமாக புதிய உத்தரவுகள் நேற்றிரவு வெளியான ஒரு விசேஷ 'கஸட்' அறிக்கை மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள இப்புதிய உத்தரவுகளின்படி இந்தச் சட்டவிதிகளுக்கமைந்த எந்த ஒரு அச்சுக்கூடத்தையும் அல்லது எந்த அச்சுக்கூடத்தின் ஒரு பகுதியையும் தகுதிவாய்ந்த அதிகாரி தமது பொறுப்பில் எடுத்துக்கொள்ள முடியும்.

## 24 மணிநேர ஆர்ப்பாட்டம்

லண்டன், பெப். 9

பிரிட்டனில் காமன்வெல்த் நாடுகளின் பிரஜைகள் குடியேறுவதை மட்டுப்படுத்தும் சட்டத்தை எதிர்த்து இன்று நள்ளிரவுமுதல் நாளை நள்ளிரவுவரை ஆர்ப்பாட்டம் செய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


## 5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

ஸிஜிதா (மஸ்கெலியா) தீபொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!
இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும்
உத்தமியின் காவியம்!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

**பாச மலர்**

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன்
சரோஜா தேவி
நடித்த
**'கைராசி'**

Daily at 4 p. m. only
THE STORY OF RUTH
(This is a Story From the Bible)


த்தாரால் யாழ்ப்பாணம, சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள
ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பெற்றது.